


ஸ்ரீ

ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:

## அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்

# ஸ்ரீநம்பெருமாள் திருப்பள்ளி ஓடம்



## தெப்பத் திருநாள் அழைப்பிதழ்

**19.02.2025 - 27.02.2026**

ஸ்ரீ:

அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்

## ஸ்ரீநம்பெருமாள் திருப்பள்ளி ஓடம்

# தெப்பத் திருநாள் உற்சவம்

பாண்டியர்கள் காலத்தில் தெப்பத்திருநாளானது எம்மண்டலங்கொண்டு கோயில் பொன்வேய்ந்த பெருமாள் சுந்தர பாண்டிய தேவர் கைங்கர்யமாக அவர் பெயரிலே நடைபெற்ற திருநாளான சித்திரைத் திருநாளுக்குத் திருக்காவிரி நீர்பாய்ச்சி அதிலே முத்தும், பவழமும் கட்டின திருக்காவணமும் கட்டுவித்து ஊருணியிலே திருப்பள்ளி ஓடம் பொன்னாலே பண்ணி நிறுத்தி அதிலே நாச்சிமார்களுடனே அழகிய மணவாளனை எழுந்தருளச் செய்து தெப்போத்ஸவம் நடைபெற்றது.

இவ்வாறு நடைபெற்ற இந்த விழாவானது பிற்காலத்தில் ஆடிப் பதினெட்டாம் நாள் அன்று திருக்காவிரியில் திருப்பள்ளி ஓடம் உத்ஸவமாக நடைபெற்று வந்தது. அவ்வாறு ஒரு ஆண்டு ஸ்ரீநம்பெருமாள் உபயநாச்சியார்களோடு திருப்பள்ளி ஓடத்திலே எழுந்தருளித் தெப்பத் திருநாள் கண்டருளுகையில் துர்மந்த்ரங்களை ப்ரயோகித்தவர்களுடைய (மாந்த்ரீகர்களுடைய) அடாத செயலால் தெப்பமானது திருக்காவிரியில் ஏற்பட்ட வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்பட, அச்செய்தியைக் கேட்டு, கூரநாராயண ஜீயரும் தம்முடைய வலது திருக்கரத்தில் அணிந்திருந்த திருப்பவித்திரத்தை வலமாகத் திருப்ப ஸ்ரீநம்பெருமாள் திருப்பள்ளி ஓடமும் காவிரி வெள்ளப் பெருக்கினை எதிர்த்து நிலைகொண்டிற்று. நாச்சியார்களும் அழகிய மணவாளனும் எவ்வித ஆபத்துமின்றி ஆஸ்தானம் சென்றடைந்தார்கள்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு கூரநாராயணஜீயர் மந்திரவாதிகளுடைய அக்கிரமச் செயல்களுக்கு இடம் கொடாதபடி கோயிலுக்கு மேற்கே பெரியதாக ஓர் குளத்தை வெட்டுவித்து அதிலே திருப்பள்ளி ஓடத் திருநாள் நடத்தும்படி பண்ணுவித்தார். அந்தச் செயலைப் போற்றும் வண்ணம் தெப்பத் திருநாளில் விட்டவன் விழுக்காடு (ஸ்ரீநம்பெருமாளுக்கு அமுது செய்த பிரசாதம்) இன்றும் ஸ்ரீரங்கநாராயண ஜீயர் மடத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

அதன்பிறகு, கந்தாடை ராமானுஜமுனி காலத்தில் (கி.பி.1489) அடைய வளைந்தானுக்கு மேற்கே அமைந்துள்ள குளத்தைச் சீரமைத்து மைய மண்டபமும் கட்டி வைத்தார்.

தற்போது நடைபெறும் மாசித் திருநாள், துளுவ வம்சத்தைச் சார்ந்த விஜயநகர சாம்ராஜ்ய மன்னரான கிருஷ்ணதேவராயர் (கி.பி.1509 - 1529) பெயரில் ஏற்படுத்தி வைக்கப்பட்ட ப்ரம்மோத்ஸவத்தின் திரிபு ஆகும். மாசித் திங்கள் நடைபெறும் திருநாளைக் கிருஷ்ணதேவ மகாராயர் திருநாள் என்று கல்வெட்டு குறிப்பிடுகின்றன. ஆயினும் இன்று மாசித் திங்களில் நடைபெறும் விழா அவர் பெயரால் குறிக்கப்படுவதில்லை. இத்திருநாள் தெப்பத் திருநாளாக ஒன்பது நாட்களுக்கு கொண்டாடப்பட்டு வருகிறது. மேலும் இத்திருவிழா மாசி மாதத்தில் வரும் ஏகாதசி திதியை கடைசி நாளாகக் கொண்டு ஸ்ரீநம்பெருமாள் தெப்பத் திருநாள் 9 நாட்கள் விமரிசையாக நடைபெறுகிறது.

அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்

## ஸ்ரீநம்பெருமாள் திருப்பள்ளி ஓடம்

# தெப்பத் திருநாள்

## முதல் திருநாள் மாசி மாதம் 7 ஆம் தேதி 19.02.2026 வியாழக்கிழமை

### ஹம்ச வாகனம்

| | |
|---|---|
| ஸ்ரீ நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து **தோளுக்கினியானில்** புறப்பாடு | காலை 7.45 மணி |
| ரெங்கவிலாச ஆஸ்தான மண்டபம் சேருதல் | காலை 8.15 மணி |
| ரெங்கவிலாச மண்டபத்திலிருந்து புறப்பாடு | மாலை 5.00 மணி |
| வாகன மண்டபம் சேருதல் | மாலை 5.15 மணி |
| **ஹம்ச வாகனத்தில்** புறப்பாடு | மாலை 6.30 மணி |
| உள்திருவீதி வலம்வந்து வாகன மண்டபம் சேருதல் | இரவு 7.45 மணி |
| வாகன மண்டபத்திலிருந்து புறப்பாடு | இரவு 8.45 மணி |
| மூலஸ்தானம் சேருதல் | இரவு 9.15 மணி |

### மூலஸ்தான சேவை

| | |
|---|---|
| சேவை நேரம் | காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.30 மணி |
| பூஜா காலம் (சேவை இல்லை) | நண்பகல் 12.30 மணி முதல் பகல் 1.15 மணி |
| சேவை நேரம் | பகல் 1.15 மணி முதல் மாலை 5.00 மணி |
| பூஜா காலம் (சேவை இல்லை) | மாலை 5.00 மணி முதல் மாலை 6.30 மணி |
| சேவை நேரம் | மாலை 6.30 மணி முதல் இரவு 8.00 மணி |

**இரவு 8.00 மணிக்குமேல் ஆரியபடாள் வாயிலுக்குள் அனுமதி இல்லை**

## 2-ஆம் திருநாள் மாசி மாதம் 8-ம் தேதி 20.02.2026 வெள்ளிக்கிழமை

### காலை பல்லக்கு – மாலை அனுமந்த வாகனம்

| | |
|---|---|
| ஸ்ரீநம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து **பல்லக்கில்** புறப்பாடு | காலை 7.00 மணி |
| உள்திருவீதி வலம்வந்து ரெங்கவிலாச ஆஸ்தான மண்டபம் சேருதல் | காலை 8.30 மணி |
| ரெங்கவிலாச மண்டபத்திலிருந்து **அனுமந்த வாகனத்தில்** புறப்பாடு | மாலை 6.30 மணி |
| உள்திருவீதி வலம்வந்து வாகன மண்டபம் சேருதல் | இரவு 8.00 மணி |
| வாகன மண்டபத்திலிருந்து புறப்பாடு | இரவு 8.45 மணி |
| மூலஸ்தானம் சேருதல் | இரவு 9.15 மணி |

## மூலஸ்தான சேவை

| | |
|---|---|
| சேவை நேரம் | காலை 7.15 மணி முதல் நண்பகல் 12.30 மணி |
| பூஜா காலம் (சேவை இல்லை) | நண்பகல் 12.30 மணி முதல் பகல் 1.15 மணி |
| சேவை நேரம் | பகல் 1.15 மணி முதல் மாலை 5.00 மணி |
| பூஜா காலம் (சேவை இல்லை) | மாலை 5.30 மணி முதல் மாலை 6.30 மணி |
| சேவை நேரம் | மாலை 6.30 மணி முதல் இரவு 8.00 மணி |

**இரவு 8.00 மணிக்குமேல் ஆரியபடாள் வாயிலுக்குள் அனுமதி இல்லை**

## 3-ஆம் திருநாள் மாசி மாதம் 9-ம் தேதி 21.02.2026 சனிக்கிழமை

## காலை பல்லக்கு – மாலை கற்பகவிருக்ஷ வாகனம்

| | |
|---|---|
| ஸ்ரீ நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து **பல்லக்கில்** புறப்பாடு | காலை 6.30 மணி |
| உள் திருவீதி வலம்வந்து வழிநடை உபயங்கள் கண்டருளி | |
| ட்ரான்ஸ்லேட்டர் ராமராவ் மண்டபம் சேருதல் | காலை 11.30 மணி |
| ட்ரான்ஸ்லேட்டர் ராமராவ் மண்டபத்திலிருந்து | |
| **கற்பக விருக்ஷ வாகனத்தில்** புறப்பாடு | மாலை 6.30 மணி |
| உள் திருவீதி வலம்வந்து வாகன மண்டபம் சேருதல் | இரவு 8.00 மணி |
| வாகன மண்டபத்திலிருந்து புறப்பாடு | இரவு 8.45 மணி |
| மூலஸ்தானம் சேருதல் | இரவு 9.15 மணி |

## மூலஸ்தான சேவை

| | |
|---|---|
| சேவை நேரம் | காலை 7.00 மணி முதல் நண்பகல் 12.30 மணி |
| பூஜா காலம் (சேவை இல்லை) | நண்பகல் 12.30 மணி முதல் பகல் 1.15 மணி |
| சேவை நேரம் | பகல் 1.15 மணி முதல் மாலை 5.00 மணி |
| பூஜா காலம் (சேவை இல்லை) | மாலை 5.00 மணி முதல் மாலை 6.30 மணி |
| சேவை நேரம் | மாலை 6.30 மணி முதல் இரவு 8.00 மணி |

**இரவு 8.00 மணிக்குமேல் ஆரியபடாள் வாயிலுக்குள் அனுமதி இல்லை**

## 4-ஆம் திருநாள் மாசி மாதம் 10-ம் தேதி 22.02.2026 ஞாயிற்றுக்கிழமை

### காலை பல்லக்கு – மாலை கருட சேவை

| | |
|---|---|
| ஸ்ரீநம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து **பல்லக்கில்** புறப்பாடு | காலை 6.30 மணி |
| உள்திருவீதி வலம்வந்து வழிநடை உபயங்கள் கண்டருளி | |
| காசுக்கடை செட்டியார் ஆஸ்தான மண்டபம் சேருதல் | பகல் 1.00 மணி |
| காசுக்கடை செட்டியார் ஆஸ்தான மண்டபத்திலிருந்து | |
| **"வெள்ளி கருட" வாகனத்தில்** புறப்பாடு | மாலை 6.00 மணி |
| உள்திருவீதி வலம்வந்து வாகன மண்டபம் சேருதல் | இரவு 8.30 மணி |
| வாகன மண்டபத்திலிருந்து புறப்பாடு | இரவு 9.00 மணி |
| மூலஸ்தானம் சேருதல் | இரவு 9.30 மணி |

### மூலஸ்தான சேவை

| | |
|---|---|
| சேவை நேரம் | காலை 7.00 மணி முதல் நண்பகல் 12.30 மணி |
| பூஜா காலம் (சேவை இல்லை) | நண்பகல் 12.30 மணி முதல் பகல் 1.15 மணி |
| சேவை நேரம் | பகல் 1.15 மணி முதல் மாலை 5.00 மணி |
| பூஜா காலம் (சேவை இல்லை) | மாலை 5.00 மணி முதல் மாலை 6.30 மணி |
| சேவை நேரம் | மாலை 6.30 மணி முதல் இரவு 8.00 மணி |

**இரவு 8.00 மணிக்குமேல் ஆரியபடாள் வாயிலுக்குள் அனுமதி இல்லை**

## 5-ஆம் திருநாள் மாசி மாதம் 11-ம் தேதி 23.02.2026 திங்கள்கிழமை

### காலை பல்லக்கு – மாலை இரட்டை பிரபை

| | |
|---|---|
| ஸ்ரீ நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து **பல்லக்கில்** புறப்பாடு | காலை 6.30 மணி |
| உள்திருவீதி வலம்வந்து ரெங்கவிலாச ஆஸ்தான மண்டபம் சேருதல் | காலை 7.30 மணி |
| ரெங்கவிலாச மண்டபத்திலிருந்து **இரட்டை பிரபை வாகனத்தில்** | |
| புறப்பாடு | மாலை 6.30 மணி |
| உள்திருவீதி வலம்வந்து வாகன மண்டபம் சேருதல் | இரவு 8.00 மணி |
| வாகன மண்டபத்திலிருந்து புறப்பாடு | இரவு 8.45 மணி |
| மூலஸ்தானம் சேருதல் | இரவு 9.15 மணி |

### மூலஸ்தான சேவை

| | |
|---|---|
| சேவை நேரம் | காலை 6.45 மணி முதல் நண்பகல் 12.30 மணி |
| பூஜா காலம் (சேவை இல்லை) | நண்பகல் 12.30 மணி முதல் பகல் 1.15 மணி |
| சேவை நேரம் | பகல் 1.15 மணி முதல் மாலை 5.00 மணி |
| பூஜா காலம் (சேவை இல்லை) | மாலை 5.00 மணி முதல் மாலை 6.30 மணி |
| சேவை நேரம் | மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி |

**இரவு 8.00 மணிக்குமேல் ஆரியபடாள் வாயிலுக்குள் அனுமதி இல்லை**

## 6-ஆம் திருநாள் மாசி மாதம் 12-ம் தேதி 24.02.2026 செவ்வாய்கிழமை

### காலை பல்லக்கு – மாலை யானை வாகனம்

| | |
|---|---|
| ஸ்ரீ நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து **பல்லக்கில்** புறப்பாடு | காலை 6.30 மணி |
| உள் திருவீதி வலம்வந்து வழிநடை உபயங்கள் கண்டருளி | |
| வாணிப ஆஸ்தான மண்டபம் சேருதல் | காலை 9.30 மணி |
| வாணிப மண்டபத்திலிருந்து தோளுக்கினியானில் புறப்பாடு | மாலை 5.00 மணி |
| யானை வாகன மண்டபம் சேருதல் | மாலை 5.45 மணி |
| யானை வாகன மண்டபத்திலிருந்து **யானை வாகனத்தில்** | |
| **புறப்பாடு** | இரவு 8.00 மணி |
| உள் திருவீதி வலம்வந்து யானை வாகன மண்டபம் சேருதல் | இரவு 9.00 மணி |
| உள் ஆண்டாள் சன்னதியில் மாலை மாற்றிக்கொண்டு | |
| மூலஸ்தானம் சேருதல் | இரவு 10.00 மணி |

### மூலஸ்தான சேவை

| | |
|---|---|
| சேவை நேரம் | காலை 7.00 மணி முதல் நண்பகல் 12.30 மணி |
| பூஜா காலம் (சேவை இல்லை) | நண்பகல் 12.30 மணி முதல் பகல் 1.15 மணி |
| சேவை நேரம் | பகல் 1.15 மணி முதல் மாலை 5.00 மணி |
| பூஜா காலம் (சேவை இல்லை) | மாலை 5.00 மணி முதல் மாலை 6.30 மணி |
| சேவை நேரம் | மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி |

**இரவு 8.30 மணிக்குமேல் ஆரியபடாள் வாயிலுக்குள் அனுமதி இல்லை**

## 7-ஆம் திருநாள் மாசி மாதம் 13-ம் தேதி 25.02.2026 புதன்கிழமை

### நெல்லளவு – உபயநாச்சியார்களுடன் சேவை

| | |
|---|---|
| ஸ்ரீநம்பெருமாள் உபயநாச்சியார்களுடன் மூலஸ்தானத்திலிருந்து | |
| புறப்பாடு | மாலை 6.30 மணி |
| நெல்லளவு கண்டருளி உள் திருவீதி வளம் வந்து மூலஸ்தானம் சேருதல் | இரவு 8.30 மணி |

### மூலஸ்தான சேவை

| | |
|---|---|
| சேவை நேரம் | காலை 7.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி |
| பூஜா காலம் (சேவை இல்லை) | நண்பகல் 12.00 மணி முதல் பகல் 1.30 மணி |
| சேவை நேரம் | பகல் 1.30 மணி முதல் மாலை 3.30 மணி |
| பூஜா காலம் (சேவை இல்லை) | மாலை 3.30 மணி முதல் மாலை 6.30 மணி |
| சேவை நேரம் | மாலை 6.30 மணி முதல் இரவு 7.45 மணி |

**இரவு 7.45 மணிக்குமேல் ஆரியபடாள் வாயிலுக்குள் அனுமதி இல்லை**

## 8-ஆம் திருநாள் மாசி மாதம் 14-ம் தேதி 26.02.2026 வியாழக்கிழமை

### தெப்பம் கண்டருளல்

| | |
|---|---|
| ஸ்ரீநம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து உபயநாச்சியார்களுடன் புறப்பாடு | மாலை 3.00 மணி |
| தெப்பக்குளம் ஆஸ்தான மண்டபம் சேருதல் | மாலை 5.00 மணி |
| தெப்பக்குளம் ஆஸ்தான மண்டபத்திலிருந்து புறப்பாடு | இரவு 7.15 மணி |
| **தெப்பம் கண்டருளல்** | இரவு 7.30 மணி முதல் 9.00 முடிய |
| மைய மண்டபம் சேருதல் | இரவு 9.15 மணி |
| மைய மண்டபத்திலிருந்து புறப்பாடு | இரவு 9.45 மணி |
| மூலஸ்தானம் சேருதல் | இரவு 11.15 மணி |

### மூலஸ்தான சேவை

| | |
|---|---|
| சேவை நேரம் | காலை 6.30 மணி முதல் நண்பகல் 11.30 மணி |
| பூஜா காலம் (சேவை இல்லை) | நண்பகல் 11.30 மணி முதல் பகல் 3.00 மணி |
| சேவை நேரம் | பகல் 3.30 மணி முதல் மாலை 5.30 மணி |
| பூஜா காலம் (புறப்பாடு) | மாலை 5.30 மணி முதல் மாலை 6.30 மணி |
| சேவை நேரம் | மாலை 6.30 மணி முதல் இரவு 9.00 மணி |

**இரவு 9.00 மணிக்குமேல் ஆரியபடாள் வாயிலுக்குள் அனுமதி இல்லை**

## 9-ஆம் திருநாள் மாசி மாதம் 15-ம் தேதி 27.02.2026 வெள்ளிக்கிழமை

### பந்தக்காட்சி

| | |
|---|---|
| ஸ்ரீ நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து **பல்லக்கில்** புறப்பாடு | காலை 8.00 மணி |
| வழிநடை உபயங்கள் கண்டருளி தெப்பக்குளம் ஆஸ்தான மண்டபம் சேருதல் | பிற்பகல் 1.00 மணி |
| திருமஞ்சனம் கண்டருளல் | மாலை 2.00 மணி முதல் மாலை 4.00 மணி |
| தெப்ப மண்டபத்திலிருந்து **ஒற்றை பிரபை வாகனத்தில்** புறப்பாடு | இரவு 7.00 மணி |
| சித்திரை வீதிகள் வலம்வந்து படிப்பு கண்டருளி மூலஸ்தானம் சேருதல் | இரவு 9.30 மணி |

### மூலஸ்தான சேவை

| | |
|---|---|
| சேவை நேரம் | காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.30 மணி |
| பூஜா காலம் (சேவை இல்லை) | நண்பகல் 12.30 மணி முதல் பகல் 1.15 மணி |
| சேவை நேரம் | பகல் 1.15 மணி முதல் மாலை 5.30 மணி |
| பூஜா காலம் (சேவை இல்லை) | மாலை 5.30 மணி முதல் மாலை 6.30 மணி |
| சேவை நேரம் | மாலை 6.45 மணி முதல் இரவு 8.00 மணி |

**இரவு 8.00 மணிக்குமேல் ஆரியபடாள் வாயிலுக்குள் அனுமதி இல்லை**

**கால நிர்ணயங்கள் மாறுதலுக்கு உட்பட்டவை**

நிர்வாகம்.

## குறிப்பு

1. பொது ஜன சேவை நேரங்களில் பொது வழியில் கட்டணமின்றி தரிசனத்திற்கு அனுமதிக்கப்படும்.
2. சேவை நேரங்களில் விரைவு தரிசன வழில் சென்று சேவிக்க நபர் ஒருவருக்கு ரூ.100/– கட்டணமாகும்.
3. பூஜா காலங்களில் மூலஸ்தானம் சேவை கிடையாது.
4. 19.02.2026 முதல் 27.02.2026 முடிய விஸ்வரூப சேவை கிடையாது.

**சு.ஞானசேகரன்**
தக்கார் / இணை ஆணையர்

**செ.சிவராம்குமார்**
இணை ஆணையர் / செயல் அலுவலர்

## FOR ANNADHANAM DONATIONS

**Pay Cheque or DD in Favour of**
Administrator, Sri Ranganatha Swamy Temple
Annadhana Thittam.

## Account Details

| Indian Overseas Bank | ICICI BANK | Karur Vysya Bank |
|---|---|---|
| A/c.No. 166101000002161<br>IFSC - IOBA0001661<br>MICR - 620020018 | A/c.No. 613401167566<br>IFSC - ICIC000134,<br>MICR - 620229004 | A/c.No. 1276155000102771<br>IFSC - KVBL0001276<br>MICR - 620053005 |